DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அர்ஜுணன் |
| Father Name | : | குருசாமி |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜரப்படுத்தப்பட்டனர். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது புதூர் ராமலட்சுமி நகரில் குடியிருக்கிறேன். நான் அழகர் நகல் பஸ் ஸ்டாப் அருகில் குரு என்ற பெயரில் சலூன் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 ராமகிருஷ்ணன் என்னுடைய வாடிக்கையாளர் ஆவார். கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் அ.சா.1 என்னுடைய கடைக்கு முடி வெட்டுவதற்காக வந்திருந்தார். அவர் முடி வெட்டிய பிறகு வெளியே கிளம்பி சென்றுவிட்டார். நான் அடுத்த வாடிக்கையாளர் அன்பரசு பாண்டி என்பவருக்கு முடி வெட்டுவதற்காக கடைக்குள் இருந்தேன். அவருக்கும் முடி வெட்டும் வேலையை ஆரம்பிக்க போனேன். அப்போது நான் தற்செயலாக என்னுடைய கடைக்குள் இருந்த கண்ணாடி வழியாக வெளியில் எதேச்சையாக பார்க்கும் போது, அ.சா.1 ராமகிருஷ்ணன் வடக்கிலிருந்து தெற்கு பக்கமாக

ஓடினார். அதைப் பார்த்து நான் பதறிப்போய் வெளியில் வந்து பார்த்தேன். நான் அப்போது அவரிடம் என்ன சார், என்ன சார் என்று அவரிடம் கேட்டேன். அப்போது அவருடைய கை, உடம்புகளில் ரத்தம் இருந்தது. நான் வடக்கு பக்கமாக திரும்பி பார்க்கும் போது, சுமார் 100, 150 மீட்டர் தூரத்தில் ஒரு நபர் ஓடிக்கொண்டிருந்தார். அப்போது அன்பரசு பாண்டி என்பவரும் வெளியிலே வந்துவிட்டார். நாங்கள் ஆம்புலன்ஸ்க்கு வரவழைக்க முயற்சி செய்தோம். அதன்பின்பு நான் கடைக்கு திரும்ப சென்றுவிட்டதால், அன்பரசு பாண்டி அவருடைய இருசக்கர வாகனத்தில் தேவதாஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். நானும் பின்னாடியே தேவதாஸ் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு மேல்சிகிச்சைக்காக ராமகிருஷ்ணனை மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும் அன்பரசும் புதூர் காவல் நிலையத்திற்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 08.15 மணியளவில் நான் என்னுடைய சலூன் கடையில் இருந்தபோது, ராமகிருஷ்ணன் என்பவர் முடி வெட்டுவதற்காக வருவதாக சொன்னார் என்றும், அப்போது ப்ரியா இருக்காரா என்று கேட்டார் என்றும், நான் அவர் இருக்கிறார் என்று சொன்னேன் என்றும், பிறகு இரவு 09.30 மணிக்கு அவருடைய ஸ்விப்ட் கார் TN 59 AL 27 என்ற எண் கொண்ட

காரில் இரவு சுமார் 10 மணிக்கு வந்தார் என்றும், அப்போது அவருக்கு SPK Hotel உரிமையாளர் ஈஸ்வரன் என்பவர் ராமகிருஷ்ணன் போனுக்கு தொடர்பு கொண்டு பேசினார் என்றும், அப்போது மற்றொரு கஸ்டமரான அன்பரச பாண்டியன் கடைக்கு முடி வெட்டுவதற்காக வந்திருந்தார் என்றும், ராமகிருஷ்ணன் கட்டிங் முடித்துவிட்டு, சுமார் 11.10 மணியளவில் அவர் நிறுத்தியிருந்த காருக்கு சென்ற சமயம் அவருடைய அலறல் சத்தம் கேட்டு நானும் எனது கடையில் முடி திருத்தம் செய்வதற்காக வந்திருந்த அன்பரச பாண்டி என்பவரும் ஓடி போய் பார்த்த போது, ஏற்கனவே எனக்கு தெரிந்த கற்பகம் நகரை சேர்ந்த சகாய பிரவீன் என்பவர் கையில் கத்தியுடன் ராமகிருஷ்ணனை வழிமறித்து ஏன்டா தாயோழி மகனே, நாங்களெல்லாம் இங்கே கஸ்டப்படுகிறோம், நீயெல்லாம் சொகுசாவாடா இருக்கிற என்று சத்தம் போட்டு, அவர் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து நீ இத்தோடு செத்து தொலைந்து போடா என்று ராமகிருஷ்ணனின் மார்புக்கு நேராக குத்தினார் என்றும், அவர் கைகளால் தடுக்க, சகாய பிரவீன் ராமகிருஷ்ணனை சரமாறியாக குத்தினார் என்றும், நாங்களும் அருகில் இருந்தவர்களும் ஓடிப்போய் மேற்படி சகாய பிரவீனை பிடிக்க முயற்சி செய்த போது, அவர் கத்தியை சுழற்றிக்கொண்டே யாராவது பிடிக்க வந்தீங்கன்னா, குத்தி கொன்னுபுடுவேன் என்று மிரட்டினார் என்றும், அனைவரும் அங்கிருந்து சிதறி ஓடினார்கள் என்றும், அவர் வடக்கு பக்கமாக கத்தியுடன் சென்றுவிட்டார் என்றும், ராமகிருஷ்ணனின் நண்பரான ஈஸ்வரன் என்பவருக்கு போன் மூலம் நான் தகவல் சொன்னேன் என்றும், நானும் அன்பரச பாண்டியும் சகாய பிரவீன் கத்தியால் குத்தியதில் வலது கழுத்து, வலது, இடது கைகள், இடது விலா, இடது மோதிர விரல், வயிற்றில் குத்துக்காயம், இடது கணுக்கால் ஆகிய

இடங்களில் காயத்துடன் இருந்த ராமகிருஷ்ணனை தேவதாஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்று முதலுதவி செய்து கொண்டிருந்த போது, அங்கு வந்த ஈஸ்வரன் அவருக்கான சிகிச்சைகளை ஏற்பாடு செய்தார் என்றும், அதன்பிறகு தகவல் தெரிந்து ராமகிருஷ்ணனின் நண்பர் ராஜ்மோகனும் ஈஸ்வரனும் ஸ்கேன் எடுப்பதற்காக தேவதாஸ் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலமாக அப்போலோ மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்துவிட்டதாக கேள்விப்பட்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.